# <u>பத்திரிக்கைச் செய்தி</u>

# தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை 2024

- தமிழகத்தில் உள்ள அரசு, அரசு உதவி பெறும் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழக வளாகப் பொறியியல் கல்லூரிகள், அண்ணா பல்கலைக்கழக உறுப்பு பொறியியல் கல்லூரிகள், அண்ணாமலை பல்கலைக்கழகம் மற்றும் சுயநிதி பொறியியல் கல்லூரிகளில் அரசு ஒதுக்கீடு இடங்களில் சேர்வதற்கான கலந்தாய்வில் கலந்து கொள்ள இணையதள வாயிலான விண்ணப்ப பதிவு **06.05.2024** முதல் **06.06.2024** வரை நடைபெறும்.

- இணையதள வாயிலான விண்ணப்ப பதிவு முகவரி

  **www.tneaonline.org**
- மேற்கண்ட இணையதளத்தில் மாணாக்கர்கள் பயன்பெறும் பொருட்டு கீழ்வரும் அனைத்து விவரங்களும் கொடுக்கப்பட்டுள்ளன.

  **1.** விண்ணப்பிக்கும் முறை.

  **2.** சான்றிதழ்கள் பதிவேற்றும் முறை ( ஒலி, ஒளி வாயிலாக ).

  **3.** கடந்த ஐந்து ஆண்டுகளில் கல்லூரி பாடப்பிரிவு மற்றும் வகுப்பு வாயிலாக மாணாக்கர்களுக்கு ஒதுக்கப்பட்ட கட் ஆஃப் மற்றும் தரவரிசை விவரங்கள்.

  **4.** தமிழ்நாடு மாணாக்கர் பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் பற்றிய விவரங்கள்.

  **5.** சிறப்பு ஒதுக்கீட்டில் சேர்வதற்கான சான்றிதழ் மாதிரிகள்.

- விண்ணப்ப பதிவு கட்டணம் **OC/BC/BCM/MBC&DNC** பிரிவினர்க்கு ரூ.**500/-** ம், **SC/SCA/ST** பிரிவினர்க்கு ரூ.**250/-** ம் ஆகும். இது தவிர, கலந்தாய்வில் கலந்து கொள்வதற்கான முன் வைப்புத் தொகை / கலந்தாய்வு கட்டணம் எதுவும் இல்லை.

- இணையதள வசதி இல்லாத மாணாக்கர்கள் பயன்பெறும் வகையில் விண்ணப்ப பதிவு மற்றும் கலந்தாய்வில் கலந்துகொள்ள உதவுவதற்காக தமிழ்நாடு முழுவதும் சென்ற ஆண்டை போலவே **110** தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை சேவை மையங்கள் நிறுவப்பட்டுள்ளன.

- மாணாக்கர்கள் காலை **8** மணி முதல் மாலை **6** மணி வரை தொலைபேசி மூலம் தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்ய வேண்டி **பத்து** இணைப்புகளுடன் கூடிய அழைப்பு மையம் தொழில்நுட்ப கல்வி இயக்ககத்தில் அமைக்கப்பட்டுள்ளது.
  இதன் அழைப்பு எண் : **1800-425-0110.**

- மேலும் மாணாக்கர்கள் **tneacare@gmail.com** என்ற மின்னஞ்சல் வாயிலாக தங்கள் சந்தேகங்களை நிவர்த்தி செய்து கொள்ளலாம்.

- சென்ற வருடம் **(2023)** கலந்தாய்வில் பங்கேற்ற கல்லூரியின் எண்ணிக்கை **474, மொத்த** இடங்களின் எண்ணிக்கை **2,21,196.** மாணக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை **1,69,887** இது**,** இதற்கு முந்தைய ஆண்டை**( 2022)** விட **12.05%** சதவீதம் அதிகம் ஆகும்.

- சென்ற வருடம் **(2023),** அரசுப்பள்ளியில் **6** முதல் **12**ம் வகுப்பு வரை பயின்ற மாணக்கர்களுக்கான மொத்த இடங்கள் **12,136.** மாணக்கர்களின் சேர்க்கை எண்ணிக்கை **9,960.** இது, இதற்கு முந்தைய ஆண்டை**(2022)** விட **11.80%** சதவீதம் அதிகம் ஆகும்.

**கோ. வீர ராகவ ராவ், இ.ஆ.ப**

**தொழில் நுட்பக் கல்வி ஆணையர் மற்றும்**
**தலைவர் – தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை 2024**

**தொழில்நுட்பக் கல்வி இயக்ககம், சென்னை - 25**

**தமிழ்நாடு பொறியியற் சேர்க்கை–2024**

**காலஅட்டவணை**

| வ. எண் | நிகழ்வுகள் | TNEA 2024 - முன் மொழியப்பட்ட தேதிகள் |
|---|---|---|
| A. | 1) அறிவிப்பு வெளியீடு<br>2) இணையதள வாயிலாக விண்ணப்பம் பதிவுசெய்தல்<br>3) விண்ணப்பங்களை நிரப்புதல்<br>4) அசல் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்தல் | 06.05.2024 |
| B. | 1) விண்ணப்பம் சமர்ப்பிக்க இறுதிநாள் | 06.06.2024 |
| | 2) அசல் சான்றிதழ்கள் பதிவேற்றம் செய்ய இறுதிநாள் | 12.06.2024 |
| C. | சமவாய்ப்பு எண் ஒதுக்கப்படும் நாள் | 12.06.2024 |
| D. | சேவை மையம் வாயிலாக சான்றிதழ்கள் சரிபார்க்கும் நாட்கள் (இணையதள வாயிலாக) | 13.06.2024 to 30.06.2024 |
| E. | தரவரிசைப் பட்டியல் வெளியீடு | 10.07.2024 |
| F. | சேவைமையம் வாயிலாக குறைகளை நிவர்த்தி செய்தல் | 11.07.2024 to 20.07.2024 |
| G. | அரசு பள்ளிகளில் பயின்ற சிறப்பு இடஒதுக்கீடு பிரிவினருக்கான கலந்தாய்வு (இணையதள வாயிலாக)<br>i. மாற்றுத்திறனாளி<br>ii. முன்னாள் படைவீரர்<br>iii. விளையாட்டு | கலந்தாய்வு தேதிகள் AICTE-யின் கல்விசார் அட்டவணைக்கு ஏற்ப அறிவிக்கப்படும் |
| H. | பொது பிரிவு – சிறப்பு இடஒதுக்கீடு பிரிவினருக்கான கலந்தாய்வு (இணையதள வாயிலாக)<br>i. மாற்றுத்திறனாளி<br>ii. முன்னாள் படைவீரர்<br>iii. விளையாட்டு | |
| I. | பொதுக்கலந்தாய்வு (இணையதள வாயிலாக)<br>1) பொதுக்கல்வி<br>2) தொழில்முறை கல்வி<br>3) அரசுபள்ளி 7.5% ஒதுக்கீடு | |
| J. | துணைக் கலந்தாய்வு (இணையதள வாயிலாக) | |
| K. | எஸ்.சி.ஏ காலியிடம் எஸ்.சி வகுப்பிற்கான கலந்தாய்வு (இணையதள வாயிலாக) | |
| L. | கலந்தாய்வு இறுதி நாள் | |

**தொழில் நுட்பக் கல்வி ஆணையர் மற்றும்**
**தலைவர் – தமிழ்நாடு பொறியியல் சேர்க்கை 2024**

# PRESS RELEASE

## DIRECTORATE OF TECHNICAL EDUCATION, CHENNAI – 600 025.
## TAMIL NADU ENGINEERING ADMISSIONS 2024

Tamil Nadu Engineering Admissions 2024 (TNEA 2024) is a complete online process which includes Registration, Payments, Choice Filling, Allotment, Confirmation and Admission.

- The official website for TNEA online admission is www.tneaonline.org
- In order to guide students, **110** TNEA Facilitation Centers (**TFC**) will be established as done in previous year.
- The registration fees for **OC/BC/BCM/MBC&DNC** categories Rs.**500/-** and for **SC/SCA/ST** categories Rs. **250/-** only.
- There is no counseling fees or initial deposit to participate in the counseling.
- In order to clarify the doubts of students and parents regarding TNEA, a call center with Toll-free number **1800-425-0110** will be established at DOTE.
- Moreover, students can also clarify their doubts through email to **tneacare@gmail.com**
- In the year **2023, 474** (442(B.E) + 32(B.Arch.)) colleges have participated in counseling.
- In the year **2023**, the total number of **1,69,887** admissions made out of **2,21,196** seats which is **12.05%** more than the previous year **2022.**
- In the year **2023**, the total number of **9,960** admissions for Government School studied students (7.5% quota) made out of **12,136** seats which is **11.80%** more than the previous year **2022**.

**Commissioner of Technical Education &**

**Chairman – TNEA 2024**

## DIRECTORATE OF TECHNICAL EDUCATION, CHENNAI – 25

## TAMIL NADU ENGINEERING ADMISSIONS – 2024

## SCHEDULE

| S. No. | Events | TNEA 2024 - Proposed Dates |
|---|---|---|
| A. | 1) Issue of notification<br>2) Commencement of Online Registration<br>3) Filling of Applications<br>4) Uploading of original certificates | 06.05.2024 |
| B. | 1) Last date for Registration of Online Applications | 06.06.2024 |
| | 2) Last date for uploading documents | 12.06.2024 |
| C. | Assigning Random Number | 12.06.2024 |
| D. | Certificates verification at TFC's (Online) | 13.06.2024 to 30.06.2024 |
| E. | Publication of Rank list | 10.07.2024 |
| F. | Grievances Redressal | 11.07.2024 to 20.07.2024 |
| G. | Counseling for Government (7.5%) Special Reservation categories (Online)<br>i. Differently Abled<br>ii. Ex-Servicemen<br>iii. Sports | **Counselling Dates will be updated in accordance with AICTE's Academic schedule** |
| H. | Counseling for General Special Reservation categories (Online)<br>i. Differently Abled<br>ii. Ex-Servicemen<br>iii. Sports | |
| I. | General Counseling (Online)<br>1) Academic<br>2) Govt. School 7.5% category<br>3) Vocational | |
| J. | Supplementary Counseling (Online) | |
| K. | SCA to SC counseling (Online) | |
| L. | End of counseling | |

**Commissioner of Technical Education &**
**Chairman – TNEA 2024**